ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2298/25 - 2022 සැප්තැම්බර් මස 20 වැනි අඟහරුවාදා - 2022.09.20

2298/25 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 3/ඉ/අත්පත්/3.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/2/2014/A/186.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், அலவ்வ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 976 - மேற்கு வென்னொருவ கிராம அலுவலர் பிரிவில், வென்னொருவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் குருநாகல் பிரிவிற்கு பொறுப்பான சிரேஷ்ட நில அளவை அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 411, பிற்சேர்க்கை இல. 21 மற்றும் தாள் இல. 24 கொண்ட 2022.06.30 ஆந் திகதிய வரைபடத்தில் 1.2212 ஹெக்டயார் முழு விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வருமாறு விபரிக்கப்பட்ட காணி துண்டு 368 மற்றும் 369 இன் துண்டு இல. 2.

**1. துண்டு இல. 368; காணியின் பெயர்: முத்துகல குரூப், வென்னருவ முதுகலவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருவோர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 1.1838 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 11AA, வீதி மற்றும் துண்டு இல. 148; கிழக்கு: துண்டு இல. 148 மற்றும் 373; தெற்கு: துண்டு இல. 148, 372, 138 மற்றும் 12C; மேற்கு: துண்டு இல. 138, 12C, 367 மற்றும் 366.

**2. துண்டு இல. 369; காணியின் பெயர்: முத்துகல குரூப், வென்னருவ முதுகலவத்தை; விபரம்: ஏரி (பாழடைந்த); ஆரம்ப உரிமை கோருவோர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.0374 ஹெக்டயார்.**



*மு. கு. - இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வடக்கு: துண்டு இல. 368 வீதி மற்றும் துண்டு இல. 148; கிழக்கு: துண்டு இல. 368 மற்றும் 372; தெற்கு: துண்டு இல. 368; மேற்கு: துண்டு இல. 368 மற்றும் 370.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, அலவ்வ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதி களாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். ஆர். எம். எஸ். மல்லவ,
பிரதேச செயலாளர்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
அலவ்வ.

பிரதேச செயலகம்,
அலவ்வ,
2022, செத்தெம்பர் 14.

EOG 9 - 0230